09.11.2023

**பி.சா. 1**

**திரு மணிகண்டன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)**

வாதி இறந்துபோன சொக்கலிங்கம் என்பவர் தாவா சொத்து அடமானத்தின் பேரில் எங்கள் நிறுவனத்தில் பெற்ற கடனுக்காக ரூ.36,30,000/- செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். அதற்காக எங்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட கணக்கு பட்டியல் தற்போது என்னிடம் காண்பிக்கப்படுவது. அந்த கணக்கு பட்டியல் **வா.சா.ஆ.8.** அந்த கணக்கு பட்டியலின்படி 3 தவணைகளாக வாதி மேற்படி தொகையை எங்கள் நிறுவனத்தில் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். தொகை செலுத்தியதற்காக எந்தவித கடன் பாக்கியும் இல்லையென வாதிக்கு நாங்கள் சான்றிதழ் வழங்கியுள்ளோம். 30.09.2023 தேதியிட்ட மேற்படி சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.9**. இறந்துபோன சொக்கலிங்கம் என்பவரது கடன் தீர்ந்து விட்டதாக எங்கள் நிறுவனத்தால் வழங்கிய அறிக்கை 26.09.2023 தேதியிட்டது. அந்த ஆவணம் **வா.சா.ஆ.10.** கடன் செலுத்தப்பட்டு

விட்டதால் வாதி கோரியவாறு தாவாவில் கோரியுள்ள பரிகாரம் வழங்குவதில் எங்கள் நிறுவனத்திற்கு ஆட்சேபனை இல்லையென்றால் சரிதான். நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் தாவா சொத்திற்கான ஆவணங்களை வாதியிடம் ஒப்படைக்க எங்கள் நிறுவனத்திற்கு ஆட்சேபனை இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

M SHANTHI

Digitally signed by M SHANTHI
DN: cn=M SHANTHI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2023.11.09 16:12:24 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.